## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, நிதிக்கூற்றுக்கள், பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை பல்கலைக்கழகத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடை முறையல்லாத சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 189,217,447 | பதவியணி மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தினால் பல கட்டங்களின் கீழ் மீள் மதிப்பீட்டுச் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் கட்டிடங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் என்பவற்றின் மீள்மதிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆன சொத்துக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டன. அதன் பிரகாரம் இலங்கை பொதுத்தறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | செயற்பாடுகள் 2023 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளேன் | |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 2,173,401 ஆன மூலதன மானியங்கள் இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 2.19.2 இன் பிரகாரம் ரூபா 216,067,868 தொகை 2022 ஆம் ஆண்டில் பரிமாற்றப்படாத வருமானமாகவும் ரூபா 2,173,402 ஆண்டின் மூலதன முற்பணமாக காண்பிக்கப்பட்டது. இது கணக்கீட்டு நியமத்துடன் எதிர்காலத்தில் ஒப்பிடுவதற்கு இணங்குவதாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உயர் கல்வி விரிவாக்கல் செயற்திட்டம் மற்றும் அபிவிருத்தியை வேகப்படுத்தும் செயற்திட்டத்தின் (AHEAD) மூலம் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 20,528,699 கூட்டுத் தொகையான சொத்துக்கள் கணக்குகளில் இருந்து விடுபட்டிருந்தன. | செயற்திட்டத்தின் மூலம் 2022.11.01 ஆந் திகதி முதல் 2022.12.31 ஆந் திகதி வரை கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை இனங் காணுதல், மெள்மையாய்வு செய்தல் மற்றும் நிதி குழுவின் ஊடாக கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல் ஆகிய விடயங்கள் 2022 ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ள கொள்வது நடைமுறை சாத்தியமாக இல்லாமையால் சொத்துக்கள் 2023 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழகத்திற்கு கையளிக்க தீர்மானிக்கப்பட்டது | ஒவ்வொரு ஆண்டும் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை அவ்வாண்டில் மூலதனம் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டுக்கு உரிய பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக செலுத்த வேண்டிய ரூபா 4,312,139 தொகை முன்னைய ஆண்டின் இலாபத்திற்கு சீராக்கம் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் செலவின மொன்றாக இனங்கானப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் நட்டம் அப்பெறுமதியால் கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை | ஆண்டுக்கு உரிய செலவை சரியாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் நிதி கூற்றுகளுக்குரிய திரண்ட பெறுமானத் தேய்வு சீராக்கத்தின் போது பெறுமானத்தேய்வு ஒதுக்கீட்டு கணக்கிலிருந்து ரூபா 3,321,744 தொகை கூடுதலாக அகற்றியமை காரணமாக மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு அப் பெறுமானத்தினால் முறையே குறைத்தும் கூடுதலாகவும் நிதி கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன | சொத்துக்கள் மீள் மதிப்பீடு செயற்பாட்டின் போது ஆய்வுகூட உபகரணக் கணக்கின் கிரயம் ரூபா 38,356,778 ஆன பாவனை பொருட்கள் இனங் காணப்பட்டன. அச்சொத்துக் களுக்குரிய தேறிய பெறுமதி ரூபா 559,012 ஆக இருந்ததுடன் அந்தக் கணக்கீட்டுத் தவறை சீராக்கியுள்ளதால் ஆண்டின் நட்டத்திற்கு எவ்வித தாக்கவும் ஏற்படவில்லை. | குறித்த பெறுமானத் தேய்வின் பிரகாரம் மீள் மதிப்பீட்டு இலாபத்தை சரியாக இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | உடன்படிக்கை மீறியமை காரணமாக மூன்று விரிவுரையாளர்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 ல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 10,423,394 கூட்டுத் தொகை மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | இரண்டு விரிவுரையாளர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,231,845 பல்கலைக்கழக சேமலாப நிதியத்தில் இருந்து நிரந்தரமாக அறவிடப்படக் கூடியதாக இருப்பதால் அதனை அறவிட்டு அறவிடக் கூடிய நிதியின் கீழ் காண்பிக்கப்படவில்லை. கலாநிதி பட்டத்தை சமர்ப்பிக்காத விரிவுரையாளர் களிடமிருந்து ரூபா 7,191,549 தொகை அறவிடப்பட வேண்டுமென பல்கலைக்கழக ஆளுகை குழு தீர்மானித்திருந்த போதும் அது தொடர்பாக சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக சட்டமா அதிபரிடம் விசாரித்துள்ள தாகவும் அந்த ஆலோசனைகள் கிடைக்கும் வரை பிணைமுறி உடன்படிக்கை மீறிய விரிவுரையாளர்களை வெளிப் படுத்தவில்லை என்பதாக | பிணைமுறி உடன்படிக்கை மீறுவதற்கு உரியதாக அறவிடப்பட வேண்டிய மொத்த பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571 | வெவ்வேறு நிர்மாணங்கள் வழங்கள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்ளும் போது நிறுத்தி வைத்ததாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 02 ஆண்டுகளை மிகைத்த மொத்தம் ரூபா 49,950,980 இற்குரிய 49 வைப்புக்கள் தொடர்பாக நிதிப பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | ரூபா 19,854,646 கூட்டுத் தொகையான இறுதிப் பட்டியல் செலுத்தப்பட்ட தன் பின்னர் மற்றும் உத்தரவாத காலம் கடந்த பின்னர் விடுவிக்கப்படுவதாகவும் ரூபா 4,196,333 கூட்டுத் தொகையான பிடிகாசு தற்போது விடுவிக்கப் பட்டுள்ளதாகவும் ரூபா 25,900,000 ஆன நிறுத்தி வைத்தல்களை விடுவிப்பதற்கோ அல்லது அரசின் வருமானத்துக்கு | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எடுப்பதற்கு அல்லது நடவடிக்கை எடுத்து வருவதாக | |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவை --------------------------- | | | |
| (i) | XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பந்தி மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆம் திகதிய 03/2017 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | 184 கல்விசார் பதவியணியின் வருகை மற்றும் வெளிச்செல்லல் உறுதி செய்யப்படாது மீளாய்வாண்டினுள் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 742,937,739 செலுத்தப்பட்டிருந்தது. | ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் சம்பளப் பிரிவின் மூலம் குறித்த பிராதானிகளிடமிருந்து உத்தியோகத்தர்களின் சேவைக்கு அறிக்கை இடப்பட்டதாக உறுதிப்படுத்தல் ஒன்று சம்பளம் கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் பெற்றுக் கொள்வதாக | பல்கலைக்கழக தாபன விதிக்கோவை மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | V ஆம் அத்தியாயத்தின் 7.6 பந்தி | 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பிணைமுறி உடன்படிக்கையை மீறிய காரணத்தால் 12 விரிவுரையாளர்களி மிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 110,016,322 தொகையினை அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பிணை முறி மீறியதற்காக ஒவ்வொரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டிய தொகை பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தில் இருந்தும் எஞ்சியவற்றை தவணை அடிப்படையில் எதிர்காலத்தில் அரவடுவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | பல்கலைக்கழக தாபன விதிக்கோவை மற்றும் உயர் கல்வி நிறுவனங் களுக்கான தாபன விதிக்கோவைய ின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 1994 ஏப்ரல் 20 ஆம் திகதிய 30/94 ஆம் இலக்க அரசு கணக்குகள் சுற்றறிக்கை | வெளிநாட்டு மானியத்தின் பேரில் செயற்படுத்தப்பட்ட 08 செயற்திட்டங்கள் தொடர்பாக பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்காமல் 06 செயற் திட்டங்களுக்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா 16,137,996 தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | வெளிநாட்டு மானியங்கள் அடிப்படையில் செயல்படுத்தப்படும் 8 செயற்திட்டங்கள் தொடர்பாக 2023 ஏப்ரல் 19 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பொதுத் திறைசேரிக்கு அறிவித்துள்ளதாக | அரச கணக்குகள் சுற்றறிக்கையி ன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | 2019 நவம்பர் 25 ஆந் திகதிய 09/2019 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக உத்தியோகத்தர் களிடமிருந்து விடுதி வாடகை அறவிடப்பட்டமை | 2018 ஆம் ஆண்டளவில் பல்கலைக்கழகத்தில் காணப்பட்ட கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களின் வெற்றிடங்கள் காரணமாக | குறித்த சுற்றறிக்கையி ன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆணைக்குழு சுற்றறிக்கை . | காரணமாக மீளாய்வாண்டிற் காக மாத்திரம் உபவேந்தர் உட்பட 53 உத்தியோகத்தர் களிடமிருந்து மொத்தம் ரூபா 4,847,532 தொகையான உத்தியோகபூர்வ வீடு களுக்கு வாடகை குறைத்து அறவிடப்பட்டிருந்தது. | பிரிவுகளில் அபிவிருத்தி செய்வதற்காக வீடமைப்பு சபையின் பரிந்துரை மற்றும் ஆளுகை சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வதிவிட வசதிகள் பதவியணியினருக்கு வழங்கப்பட்டதாக | வேண்டும். |
| (உ) | 2009 செப்தம்பர் 01 ஆந் திகதிய DMA/ 2009(2) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 869,829,650 கிரயமான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நாளது வரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டு இருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டின் போது பல்கலைக் கழகத்தின் நிதிப் பிரிவினால் பொது பேரேடு சம்பள தயாரித்தல், இருப்பு மற்றும் நிலையான சொத்துக்கள் போன்ற பிரிவுகளின் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கை இடுவதற்காக 04 கணினி முறைமைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் ஒவ்வொரு தொகுதி சொத்துக்களினதும் மீள் மதிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் நிலையான சொத்துக்கள் மென்பொருளை நாளது வரையாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | | | |
|---|---|---|---|
| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
| (அ) | 2017 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு உரியதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் பொது திறைசேரியினதும் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளாது பல்கலைக்கழக பதவியணியின் 181 உத்தியோகத்தர்களுக்கு வீட்டு வாடகை படிகளாக ரூபா 69,239,305 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இக்கொடுப்பனவிற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு இரண்டாவது தடவையாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக இதுவரை அங்கீகாரம் கிடைக்கவில்லையென்பதாக | முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் படிகளைச் செலுத்த நடவடிக்கை எடுக்க கூடாது |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத பொறியியலாளர் பதவி 2015 திசெம்பர் 02 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் 06 மாத காலப்பகதிக்காக ரூபா 50,000 | 2016.12.30 ஆந் திகதிய நியமனக் கடிதத்தின் பிரகாரம் ரூபா 1,200 மில்லியன் பெறுமதியான 05 செயற் திட்டங்களின் கேள்வி நடவடிக்கைகள் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத உத்தியோகத்தர் களை ஆட்சேர்ப்பதற்கா |

| | | | |
|---|---|---|---|
| | படியெதான்ற கொடுப்பனவு அடிப்படையில் ஊவா மாகாண கட்டிடத் திணைக்களத்தின் பணிப்பாளர் அலுவலகத்தின் பிரதான பொறியியலாளர் ஒருவர் பகுதி நேர அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டிருந்தார். தொடர்ந்து சேவை காலம் நீடிக்கப்பட்டு 2018 யூன் 01 ஆந் திகதி முதல் மாதாந்த படிகள் ரூபா 75,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் முதல் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக மொத்தம் ரூபா 5,325,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மற்றும் நிர்மாணத்திற்கு பொறுப்பாக நடவடிக்கை எடுப்பதுடன் அவருக்கான கொடுப்பனவு 05 செயற்திட்டங்களின் மதியுரை சேவைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்தே கொடுப்பனவு செய்யப்பட்டதாகவும் . | க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரித்தல்லாத பதவியொன்றுக்கு காணி கையேற்பு செயற்பாட்டை மேற்பார்வை செய்வதற்காக 2017 திசெம்பர் 06 ஆந் திகதி முதல் ஓய்வு பெற்ற காணி ஆணையாளர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 2018 யூலை 18 ஆந் திகதிய 3/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு இணங்காத வகையில் மாதாந்தம் ரூபா 50,000 வீதம் நியமன திகதி முதல் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 3,050,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் 2005 யூலை 28 ஆந் திகதிய 1403/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் ஊவா வெள்ளஸ்ஸ பல்கலைக்கழகத்தை நிர்மாணிப்பதற்காக காணி கையேற்பதற்காக பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அதன் பின்னரான செயற்பாடுகளை பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் மேற்படி நியமனம் செய்யப்பட்டு 05 ஆண்டு காலப்பகுதி கடந்திருந்த பின்னரும் பிரகடனப்படுத்தப்பட்ட காணியை பல்கலைக் கழகத்திற்கு கையேற்க முடியாதிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்டிருந்த UGC/ IDD/ GEN/01 ஆம் இலக்க கடிதத்தின் பரிந்துரைகளின் பிரகாரம் விசேட அறிவுள்ள ஓய்வு பெற்ற காணி ஆணையாளர் ஒருவரை பல்கலைக் கழகத்தின் பேரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2017 திசெம்பர் 11 ஆந் திகதி நியமனம் செய்யப்பட்டதாக இந்த உத்தியோகத்தர் வருகை தந்த பின்னர் 0.8119 ஹெக்டேயர் அளவிலான கையேற்பு செயற்பாடுகள் முடிவடைந்துள்ளதுடன் 12 ஏக்கர் மற்றும் 05 ஏக்கர் காணியை கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | மேற்குறித்த பிரகாரம் நடவடிக்கைகள் துரிதப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | 2010 ஏப்ரல் 23 ஆம் திகதிய 921 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் சிரேஷ்ட உதவி நூலகர் பதவிக்காக 2018 ஜூலை 25 ஆந் திகதிய நியமனக் கடிதத்தின் மூலம் தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரி ஒருவர் முறையற்ற விதத்தில் அப்பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 2018 ஆகஸ்ட் முதல் 2022 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியினுள் ரூபா | 178 ஆவது ஆளுகை சபை கூட்டத்தின் போது இவ்விடயங்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட உப குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளின் பிரகாரம் கல்வித் தகைமைகள் மற்றும் ஆறு ஆண்டுகள் அனுபவம் தேவையாக | தகைமைகள் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 14,061,053 ஆன சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே தொழில்நுட்ப உத்தியோகத்தர் பயிலுனர் II தரத்தின் ‘‘ஆ’’ தொகுதியின் பதவிக்கு தகைமைகளை பூர்த்தி செய்யாத ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஒக்தோபர் வரை ரூபா 3,275,787 ஆன சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | உள்ளதால் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் மூன்றாண்டு காலம் உதவி நூலகர் (பயிலுனர் நிலை) பதவிக்கு ஆட்சேர்த்து 2021 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் சிரேஷ்ட உதவி நூலகர் பதவிக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு ஆளுகை சபை தீர்மானித்தாக | |

### 1.8 ஒப்பீட்டு மீளாய்வு மற்றும் மதிப்பீடு செய்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாதுகாப்பு சேவையை பராமரித்துச் செல்வதற்காக குறைந்த கேள்வியைச் சமர்ப்பித்திருந்த கம்பனியின் கேள்வி நியாயமான காரணங்கள் இன்றி நிராகரிக்கப்பட்டு மூன்றாவது கேள்விதாரருக்கு ஒப்பந்தத்தை கையளித்த காரணத்தினால் 2020 ஒக்தோபர் 01 ஆம் திகதி முதல் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக பாதுகாப்பு சேவை வழங்கியமைக்காக பல்கலைக் கழகத்தினால் ரூபா 11,827,308 கூடுதலாக கொடுப்பனவு செயயப்பட்டிருந்தது. | நாளொன்றிற்கான குறைந்த சம்பளத்தின் பிரகாரம் சரியாக கேள்வியை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு கேள்வி வழங்கப்பட்டதாக | அரசிற்கு ஆகக்கூடிய நன்மைகளை கிடைக்க கூடிய வகையில் பெறுகை செயற்பாடு மேற்கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 225,687,938 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 142,962,594 ஆகும். அதற்கமைய நிதிப் விளைவுகளில் ரூபா 368,650,532 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டில் அரசின் மூலதன மானியம் ரூபா 223,158,284 ஆல் குறைவடைந்தமை, செயற்பாட்டுச் செலவினம் ரூபா 256,952,249 ஆலும் தொழிற்பாடல்லாத செலவினம் ரூபா 36,285,606 ஆலும் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2004 ஒக்டோபர் 28 ஆம் திகதிய 2004/ED/HE/45 ஆம் இலக்க அமைச்சரவை குறிப்பின் பிரகாரம் பல்கலைக்கழகத்தினால் விடுதிகளை நிர்மாணித்து மாணவர்களுக்கும் உத்தியோ கத்தர்களுக்கும் விடுதி வசதிகளை வழங்க வேண்டிய் போதிலும் அதற்காக நிதி | ஆரம்பமாக 502 மாணவர் களுக்கு விடுதி வசதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்தை சுற்றிலும் விடுதி வசதிகளைப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் விடுதிகளை நிர்மாணிக்க 2015 | மாணவர்களுக்கு விடுதி வசதிகளை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

ஏற்பாடுகளை மேற் கொள்வதற்கோ பொருத்தமான இடம் ஒன்றினை இனங்கண்டு விடுதிகளை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் 2018 சனவரி முதல் 2022 திசெம்பர் வரை வெளியிலிருந்து விடுதி வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 202,907,314 கூட்டுத் தொகையான வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அதற்காக 12 ஏக்கர் காணியொன்றை பல்கலைக்கழகத்தை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன். இதன் மூலம் 2,000 மாணவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்குவதற்க் எதிர்பார்ப்பதாக